## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OP - 137/2022

**நாள் – 05.03.2026**

**RW – 1** பன்னீர் செல்வி

**த/பெ.** சுப்பிரமணி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 5th March 2026)**

**குறுக்கு விசாரணை**

எனக்கும் மனுதாரருக்கும் இடையே கடந்த 08.06.1997ம் ஆண்டு திருமணம் நடந்தது. நான் 1998ம் ஆண்டிலிருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் 1999ம் ஆண்டிலிருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறேன். எனக்கு குழந்தை பிறக்கவில்லை என்றால் சரிதான். என்னைவிட மனுதாரர் 5 வயது இளையவர் என்றால் சரிதான். எங்களுடைய திருமண செலவு மனுதாரர்தான் செய்தார் என்றால் இல்லை எனது அப்பாதான் செலவு செய்தார். எனது அப்பா விவசாயம் செய்து வந்தார். எனது அப்பா 5 ஏக்கர் விவசாய பூமி வைத்திருந்தார். நான் சொல்வது பொய் என்றும், எனது திருமண சமயத்தில் எனது அப்பா எந்த வேலைக்கும் போகாமல் வீட்டிலேயே தான் இருந்து வந்தார் என்றும், அதனால் எங்களது திருமண செலவுகளை எனது அப்பா செய்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்தவர்கள் என்னோடு சேர்த்து 5 பேர். எனது பெற்றோர் இறந்துபோய் விட்டார்கள். எனது அப்பா 2003ம் ஆண்டிலும், எனது அம்மா 2018ம் ஆண்டிலும் இறந்துபோய்விட்டார்கள். எனது அப்பா உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்துதான் இறந்துபோனார். அதனால் எனது திருமணத்திற்கு பிறகு நான்

எனது அப்பாவை அடிக்கடி சென்று பார்த்துவிட்டு வர வேண்டி இருந்தது என்றால் சரிதான்.

2. நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்த ஒரு வருட காலத்தில் எங்கள் இருவருக்கும் சிறு, சிறு பிரச்சனைகள் இருந்து வந்தது என்றால் இல்லை. நான் எந்தவித காரணமும் இல்லாமல் மனுதாரருடன் அடிக்கடி சண்டையிட்டு வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. 1998ம் ஆண்டில் மனுதாரரின் தாயாரின் சித்தியும், அவரது மகனும் தற்கொலை செய்துகொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் 1998ம் ஆண்டிலேயே மனுதாரரை விட்டு பிரிந்து சென்று விட்டதால்தான் மேற்படி விவரம் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் தற்கொலை செய்துகொண்டதை நேரில் பார்த்த வாதியின் தாயாரும் உடல்நிலையும், மனநிலையும் பாதிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். எனது மாமியாரை மனுதாரர்தான் பராமரித்து வந்தார் என்றால் நானும் உடனிருந்துதான் பார்த்துக்கொண்டேன். அதேபோல் எனது மாமியாரை எனது பெற்றோர் வீட்டிற்கும் அழைத்து சென்று அங்கு வைத்து ஒருவார காலம் பார்த்துக்கொண்டேன். நான் சொல்வது பொய் என்றும், நான் சொல்வதுபோல எந்த காலத்திலும் எனது மாமியாரை பராமரித்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

3. எனது மாமியாரை பராமரிக்க வேண்டும் என்ற பொறுப்பு என் தலைமீது வைக்கப்பட்டதன் காரணமாகத்தான் நான் வேண்டுமென்றே மனுதாரருடன் சண்டையிட்டுக்கொண்டு எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் எனது பெற்றோர் வீட்டில் இருந்தபோது மனுதாரர் அவரது உறவினர்களுடன் வந்து சமாதானம் பேசினார்கள் என்றால் இல்லை, நாங்கள்தான் மனுதாரர் வீட்டிற்கு சென்று

சமாதானம் பேசினோம். நான் சொல்வது பொய் என்றும், மனுதாரர்தான் எங்கள் வீட்டிற்கு வந்து எங்களுடன் சமாதானம் பேச முற்பட்டார்கள் என்றும், ஆனால் நான்தான் அவர்களை தகாத வார்த்தைகளால் பேசி அவமானப்படுத்தி அனுப்பிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல 1998ம் ஆண்டில் மனுதாரர் என்னை அடித்து துரத்திவிட்டதாக சொல்லியுள்ளதை பொறுத்து உடனடியாக காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அதேபோல் நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டி நீதிமன்றத்தின் மூலம் சட்டபடியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான், ஆனால் சேர்ந்து வாழதான் பெருந்துறை கோர்ட்டில் ஒரு வழக்கு தாக்கல் செய்தேன். நான் பெருந்துறை கோர்ட்டில் ஜீவனாம்சம் கோரிதான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றும், சேர்ந்து வாழ வேண்டி நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. நான் சேர்ந்து வாழக் கேட்டு தாக்கல் செய்ததாக சொல்லப்படும் வழக்கு பற்றிய ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பா இறந்து இரண்டு வருடம் கழித்து எனது இரண்டாவது அண்ணன் சத்தியமூர்த்தி 2007ம் ஆண்டில் இறந்துபோய்விட்டார். எனது அப்பாவும், எனது அண்ணனும் இறந்துபோய்விட்ட நிலையில் எங்கள் குடும்பம் பொருளாதார அடிப்படையில் நலிந்து விட்டோம் என்றும், அதனால் மனுதாரரிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்றும் என்ற கெட்ட எண்ணத்தில்தான் காவல்நிலையத்தில் நான் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் பேரில் என்னையும், மனுதாரரையும் போலீசார் அழைத்து விசாரித்தார்கள் என்றால்

சரிதான். அந்த விசாரணையில் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ்வதாகத்தான் சொன்னார் என்றால் சரிதான். ஆனால் நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ செல்லவில்லை என்றால் நான் தயாராகத்தான் இருந்தேன் மனுதாரர்தான் வந்து என்னை அழைத்து செல்லவில்லை. நான் சொல்வது பொய் என்றும், மனுதாரர் என்னை வந்து சேர்ந்து வாழ அழைத்தும் நான்தான் மனுதாரருடன் செல்ல மறுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு பின்னிட்டுதான் நான் பெருந்துறை நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கேட்டு மனுதாரர் மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த ஜீவனாம்ச மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு இணங்க மனுதாரர் எனக்கு 2022 ம் ஆண்டு வரையில் ஜீவனாம்சம் செலுத்திவந்தார் என்றால் சரிதான்.

5. மனுதாரர் அவரது தாயாருக்கு சொந்தமான நிலத்தை விற்க முயற்சி செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் சொல்வது பொய் என்றும், மனுதாரர் சொத்தை விற்க முயற்சி செய்தபோது நான் விவகாரத்தில் தலையிட்டு அந்த சொத்தை விற்க முடியாத அளவிற்கு பிரச்சனை ஏற்படுத்தி மனுதாரருக்கு நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு திருமணம் நடைபெற்ற பின்னிட்டு நான் மனுதாரருக்கு எண்ணற்ற இடையூறுகளை செய்துவந்தேன் என்றால் சரியல்ல. மனுதாரருடன் சேர்ந்துவாழ வேண்டிய எண்ணம் எனக்கு எப்போதும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு எனக்கு மனுதாரருடன் சேர்ந்து வாழ எண்ணம் இருந்திருந்தால் அதுகுறித்து சட்டப்படியான நடவடிக்கை எடுத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கடந்த 28 வருட காலமாக மனுதாரரை விட்டு

வாழ்ந்து வருகிறேன் என்றும், மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ பலமுறை முயற்சி செய்தும், நான்தான் மனுதாரருடன் சேர்ந்து வாழாமல் தவிர்த்து வருகிறேன் என்றும், அதனால்தான் மனுதாரர் வேறு வழியின்றி விவாகரத்து கோரி இந்த மனுவை தாக்கல் செய்ய நேரிட்டது என்றால் சரியல்ல. மனுதாரரிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் பொய்யாக எதிர் வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் மனுதாரர் மனுவில் கோரியபடி விவாகரத்து கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.06 09:57:06 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**